2013 மார்ச் 27]
86—

சொந்தக் கட்டடம்

***5691—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பி. அழகாபுரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலுள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பி. அழகாபுரியில் வாடகைக் கட்டடத்தில் ஆதி திராவிடர் பெண்கள் விடுதி செயல்பட்டு வந்தது. எங்கெல்லாம் ஆதி திராவிடர் நல விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்ததோ, அங்கெல்லாம், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின் சொந்தக் கட்டடம் கட்ட ஆணை பிறப்பித்ததனைத் தொடர்ந்து அரசாணை நிலை எண் 18, ஆதி திராவிடர் நலத் துறை, நாள் 12–3–2013–ன்படி 44 விடுதிகள் கட்டுவதற்கு ரூபாய் 35.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் பி. அழகாபுரியில் உள்ள ஆதி திராவிடர் பெண்கள் விடுதியைக் கட்டுவதற்கு 79 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற வைர வரிகளுக்கு ஏற்ப வரியில்லா பட்ஜெட்டை வாரி வழங்கி, "திட்டங்களுக்காக மக்கள் இல்லை, மக்களுக்காகவே திட்டங்கள்" என்ற தாரக*

மந்திரத்தைச் செயல்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அள்ளித் தரும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பினை அரசு இதழில் வெளியிட வேண்டி சட்டப் போராட்டம் நடத்தி, காவிரி நீரை மீட்டுத் தந்த காவிரித் தாயே! கருணைத் தெய்வமே! பொன்னியின் செல்வியே! திருமயம் தொகுதியில் பி. அழகாபுரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிதி வழங்கி ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றியை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

சொகுசுப் பேருந்து

***8337—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூரிலிருந்து சென்னைக்குக் கூடுதலாக சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, பேரையூரிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை சார்பில் ஒரு சாதாரண பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்தில் பயணிகளின் எண்ணிக்கை என்பது டிசம்பர் மாதம் 52 சதவிகிதம், ஜனவரி மாதம் 56 சதவிகிதம், பிப்ரவரி மாதம் 50 சதவிகிதம் என சராசரியாக 53 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே